TIT-BITS OF ANIMAL LIFE

A QUARTERLY ADVOCATE OF HUMANITY FOR SCHOOLS AND FAMILIES

ஜந்து வர்த்தமான ஸாரம்.

பாடசாலைகளுக்கும் வீடுகளுக்கும் உபயோகப்படும்

ஜீவகாருண்ய விளக்க மும்மாதப் பத்திரிகை.

சம்புடம் XII.] **NOVEMBER, 1912-௵ நவம்பர்௴.** [இலக்கம் 4

ஜந்துக்கள் தம் எண்ணங்களை வெளிப்படுத்தும் சக்தி.

பறவைகளுக்கும் மிருகங்களுக்கும் தோன்றுகிற எண்ணங்கள் சொற்பமாயும் அற்பமானவையாயு மிருக்கலாம். ஆயினு மவைகள் அவைகளி னபிப்பிராயங்களை யெல்லாம் அவை யுச்சரிக்கிற ஓசைச்சொற்களினால் வெளியிடுகின்றனவென்று நம்புகிறதற் கில்லை. அந்த சப்தங்களினால் பசி, கோபம், பயம், வலி முதலிய சாதாரணமான உணர்ச்சிகளைத் தெரிவிக்கக்கூடும். சில மிருகங்களுக்கு இவைகளைவிடக் கொஞ்சம் மேலான எண்ணங்களை வெளியிடுவதற்கும் பாஷை யிருக்கலாம். குரங்குகளின் பாஷையைக் கற்பதற்காக ஆப்பிரிக்கா கண்டத்திற்குச் சென்ற டாக்டர் கார்னர் (Dr. Garner) துரையவர்கள் சாதாரணமான குரங்குகள் ஏழுவிதமான சப்தங்களைத்தான் உச்சரிக்கின்றனவென்றும் வானரங்களில் அதிகமான புத்தியையுடைய சிம்பான்சி (Chimpanzee) என்னும் வகுப்புக் குரங்குகள் இருபத்திரண்டுவிதமான ஒலிகளை உச்சரிக்கின்றனவென்றுங் கண்டுபிடித்திருக்கிறார்.

மிஸ்டர் எட்மண்ட் செலூஸ் (Mr. Edmund Selous) என்னுந் துரையவர்கள் காக்கைகளுடைய சப்தங்களில் முப்பத்துமூன்று வேறுபாடுகளைக் கவனித்துக் காக்கைகளின் பாஷை அதிக விரிவானதென்றும் அவர் கண்டுபிடித்தது அதிக சுருக்கமென்றும் கூறியிருக்கிறார். அந்த முப்பத்து மூன்று ஒலிகளில் சிலவற்றிற்குத்தான் பொருளறிந்துகொள்ள முடிந்ததாம்.

மிருகங்களின் உச்சரிப்புக ளெல்லாம் ஓசைச்சொற்களாயும் இடைச்சொற்களைப் போன்று மிருக்கிறதினால் அவை அவைகளி னெண்ணங்களை யொன்றுக்கொன்று தெரிவித்துக்கொள்வதற்குப்போதுமானவையாயிருக்கின்றனவா அல்லது வேறு வகையாலும் மிருகங்க ளொன்றோடொன்று சம்பாஷிக்கின்றனவா வென்கிற சம்சய முண்டாகிறது. ஒலிகளைத்தவிர வேறுவிதத்திலு மவை சம்பாஷிக்கக் கூடுமென்றுதான் அநேகர் அபிப்பிராயப்படுகிறார்கள்.

சில பறவையினங்களில் ஆண்பறவையும் பெட்டையும் சேர்ந்து கூடுகட்டுகிறதுண்டு. என் வீட்டு முற்றத்தில் புல்புல் என்னும் ஜாதிக் குருவிகள் கூடுகட்டுவதைக் கவனித்திருக்கிறேன். ஆணும் பெட்டையு மோரிடத்தி லுட்கார்ந்திருக்கையில் திடீரென்று இரண்டும் பறந்துபோய்க் கொஞ்சநேரத்திற்குள் வைக்கோல் துரும்புகளையும் சிறு குச்சிகளையுங் கொண்டுவரும். பிறகு அவ்விரண்டுமாய்ச் சேர்ந்து கூடுகட்டுவதற்கு வசதியானவிடத்தைப் பார்க்கும் பொருட்டு இங்குமங்கும் சென்று பார்த்து ஓரிடத்தைத் தேர்ந்தெடுத்து அங்கே கூடு கட்ட வாரம்பிக்கும். இடையி லவைகளி லேதாவதொன்று பறந்து சென்று இன்னுஞ் சிறிது வைக்கோலையோ குச்சியையோ ஓலையையோ கொண்டுவரும். இதையெல்லாம்

பார்க்கும்பொழுது அவை முதலில் கூடு கட்டவேண்டுமென்று ஒன்றோடொன்று பேசிக்கொண்டு போனதாகவும் இடத்தைத் தேடும்பொழுது இவ்விடத்தில் இன்ன கஷ்டமிருக்கிறது, அவ்விடத்தில் இன்னவிதமான அசௌக்கிய மிருக்கிறது, ஆகையால் இவ்விடம் வேண்டாம், அவ்விடம் வேண்டாமென்று அவை தர்க்கித்ததாகவும் கடைசியில் இரண்டுக்கும் சம்மதப்பட்ட விடத்தில் கூடு கட்டுகையில் சில சாமான் குறையவே இன்ன சாமான் வேண்டுமென்று அவை ளி லொன்று சொல்ல மற்றொன் றதைப்போய்க் கொணர்ந்ததாகவும் என் மனதுக்குத் தோன்றும்.

சில சமயங்களில் ஆண்பறவை யொரு கூட்டையும் பெட்டை யொரு கூட்டையும் கட்டி அவைகளி லுசிதமான கூட்டில் போய் வசிப்பது முண்டு. அப்படிப்பட்ட சமயங்களில் அவ்விரண்டிற்கும் மனஸ்தாபங்களுண்டாகிச் சிறிதுநேரங் கழிந்தபிறகு அவைகளி லேதாவதொன்று மற்றதற்குத் தாழ்ந்து அதன் சொற்படி கேட்ப துண்டு. இதற்குத் திருஷ்டாந்தமாக "கண்ட்ரி லைவ்ப்" ("Country Life") என்னும் பத்திரிகையில் மிஸ்டர் ஆல்ப்ரெட் டெய்லர் (Mr. Alfred Taylor) என்பவர் இரண்டு வாலாட்டிக் குருவிகள் கூடுகட்டின விருத்தாந்தத்தைப் பற்றிப் பின் வருமாறு எழுதியிருக்கிறார்:—

"ஆற்றோரத்தி லிருக்கிறஎன்னுடையகுடிசையின் கூரையிலிருந் தோர்நாள் இரண்டு வாலாட்டிக்குருவிகள் பறந்து சென்று கூடு கட்டுவதற்கு வேண்டிய சாமான்களை ஏராளமாய்ச் சேகரித்துக்கொண்டு ஓரிடத்தில் ஆண்குருவியும் அவ்விடத்திற்கு இரண்டு மூன்று கஜங்களுக்கப்பால் பெட்டையுமாகத் தனித்தனி கூடுகளைக் கட்டின. பிறகு ஆண்குருவி அதிக கோபத்துடன் பெட்டையின் கூட்டைப் போய்ப் பிரித்துவிட்டது. அதைக் கண்டதும், அது அதிக வியசனத்துடன் ஓர் மரக்கிளையில் போ யுட்கார்ந்துவிட்டது. பிறகு ஆண்குருவி எவ்வளவு சமாதானப்படுத்தி யழைத்தாலும் பெண்குருவிக்குத் துக்கம் நீங்கவேயில்லை. அன்று நேரமாகிவிட்டபடியா லவைகளை யந்நிலைமையிலேயே விட்டுச் சென்றேன். மறுநாள் அவைகளின் வழக்கு எப்படி முடிந்ததென்று பார்க்கப் போனேன். அப்பொழுது நான் கண்ட காட்சி யெனக் கதிக வாச்சரியமாயிருந்தது. முதல்நாள் ஆண்குருவி பிடுங்கி யெறிந்துவிட்ட கூட்டை மறுபடியுங் கட்டிக் கொண்டிருந்தது. அதன் காரண மறியும்பொருட்டு ஆண்குருவி முதல்நாள் கட்டின கூட்டைப் போய்ப் பரிசோதிக்க அதனருகில் எலிவளை யொன்றிருந்ததைக் கண்டேன். இவ்விஷயத்தை ஆண்குருவி கவனிக்காமலங்கே கூடு கட்டிற்று. பிறகு பெண்குருவி தேடி யெடுத்தவிடமே அபாயமில்லாத விடமென்று எப்படியோ அது அறிந்துகொண்டு அவ்விடத்தில் வசிக்க இசைந்திருக்கலாம்."

மேற்கூறிய விவகாரங்களெல்லாம் அப்பறவைகள் அவைகளுடைய எண்ணங்களை வெளிப்படுத்தாமலே நடந்திருக்கக் கூடுமென்று நம்புவது சிறிது கஷ்டமா யிருக்கிறது.

மிருகங்களுக்குத் தூரதிருஷ்டியும் உண்டென்று சிலர் கூறுகிறார்கள். அதாவது அவை கண்ணுக்கு மறைவில் நடக்கிற விஷயங்களை யறிகிற சக்தி வாய்ந்திருக்கின்றனவாம். ஒரு துரைமகன் வீட்டில் வளர்ந்து வந்த பூனை யொன்று அவ்வீட்டில் மற்றொரு பூனையை வளர்க்க வாரம்பித்ததைக் கண்டு அவ்வீட்டைவிட்டு ஓடிப்போயிற்றாம். ஆறு மாத காலம்வரையிலும் அது அவர்களுக்ககப்பட வில்லை. பிறகோர் நாள் புதிதாக வந்த பூனையைத் தற்செயலாய் வேறோரிடத்திற் கழைத்துச் சென்றார்கள். அது அவ்வீட்டைவிட் டகன்று சில மணிநேரத்துக்குள் பழைய பூனை அவ்வீட்டிற்கு வந்ததாம்.

ஒரு துரைமகன் நாள்தோறும் தன்னுடைய நாயை யழைத்துக்கொண்டு வெளியே போகிற வழியி லொரு வீட்டண்டை அந்த நாய் பதுங்கிக்கொண்டு செல்லுமாம். ஏனென்றால் அவ்வீட்டிலிருந்த நாய் இதைக் கண்டபோதெல்லாம் சண்டையிடத் தலைப்படுமாம். ஆனால் ஒருநாள் அந்த நாய் யாதொரு பயமுமில்லாமல் அதிவேகமாய்ப் போயிற்றாம். இதைக்கண்டதிசயித்து அந்தத் துரைமகன் காரணத்தை விசாரிக்க அவ்வீட்டுநா யொரு மணி நேரத்திற்குமுன் னிறந்துவிட்டதாகத் தென்பட்டது.

தேனீக்களும் அவைகளை வளர்ப்பதும்.

தேனீக்களை வளர்ப்பது நாடுகளில் தொன்றுதொட்டுச் செய்துவருகிற தொழில்களி லொன்று. உலகமுழுவதும் வெகுகாலமாய்த் தேனின் பிரயோஜனம் அறியப்பட்டு எல்லா ஜனங்களாலும் மதிக்கப்படுகிறது. ஐரோப்பாக் கண்டத்தில் மற்றத் தேசங்களைக் காட்டிலும் பிரிட்டிஷ் தீவுகளில் (British Isles) அநேக நாட்டுப்புறத்தார் சொந்தப் பிரயோஜனத்திற்காகவும் வியாபாரத்திற்காகவும் தேனீக்களை விசேஷமாய் வளர்க்கிறார்கள். ஒவ்வொரு மாகாணத்திலும் அதற்காக ஒரு சபை ஏற்பட்டு இந்த லாபகரமான தொழிலை விருத்திசெய்து வருகிறார்கள்.

இந்தியாவில் ஐரோப்பிய தேனீக்களைக் கொண்டுவந்து வளர்க்கப் பல வருஷங்களாக அநேகர் பிரயத்தனப்பட்டபோதிலும் 1910-ம் வருஷத்தில் மிஸ்டர் ஜி. ஓக்ஸ் துரையவர்கள் (Mr. G. Oakes) நீலகிரி மலைகளில் கொண்டுவந்து வளர்த்த ஆங்கிலேய தேனீக்கள்தான் செழித்து முப்பத்தாறு பவுன் நிறையுள்ள நேர்த்தியான தேனைக் கொடுத்தன. அதே துரை முதலில் இத்தாலிய தேனீக்களைக் கொண்டுவந்திருந்தார். அவை சில மாதங்களுக்குள் இறந்துவிட்டன. சுமார் இருபது வருஷங்களுக்குமுன் ஒரு துரைசானி நீலகிரி மலைகளில் வளர்க்கும்பொருட்டு இங்கிலாந்திலிருந்து சில தேனீக்களை வாங்கிக்கொண்டு வந்தார். ஆனால் அவையெல்லாம் அலெக்ஸாண்ட்ரியாவுக்கு வருகிறதற்கு முன்னமே இறந்துவிட்டனவாம்.

இத்தாலிய ஈக்களையும் ஸைப்ரஸ் என்னும் தீவின் ஈக்களையுங் கொண்டுவந்து இத்தேசத்துக் காட்டுத் தேனீக்களுடன் சேர்த்து வளர்த்தால் அவை விருத்தியடையுமென்று அநேகர் அபிப்பிராயப்படுகிறார்கள். இவ்விஷயத்தில் நீலகிரியில் செய்த முயற்சிகள் நிறைவேறாமற் போனதற்குக் காரணம் அங்கே செய்த ஏற்பாடுகள் குறைபாடுள்ளனவாயிருக்கலாம். இந்தியாவில் தேனீ வளர்க்கிற தொழிலை ஒரு வியாபாரமாகச் செய்வதவசியமானகாரியம். அதற் கனுகூலமான விடங்க ளநேகம் இந்தியாவி லுண்டென்பதற்குச் சந்தேகமேயில்லை. தற்காலத்தில் இந்தியாவில் அநேகமாகாணங்களில் தேனைச் சேகரிக்கிற தொழில் காட்டு ஜாதியாரைச் சேர்ந்ததா யிருக்கிறது. காஸ்மீரம், குடகு, திருவாங்கூர் இம்மூன்று நாடுகளில்தான் நாட்டு ஜனங்களே ஈக்களை வளர்க்கிறதாகத் தெரியவருகிறது. அவர்கள் தேனைச் சேகரிக்கிறவிதம் அதிக புராதனமானதும் அதிக சேதமுண்டாக்குவதுமாயிருக்கிறது. பானைகளில் மெழுகைத் தடவி அவைகளில் சிறு துவாரங்களைக் குத்தி வைத்துவிடுகிறார்கள். அந்த மெழுகுக்காக வருகிற ஈக்கள் பிறகு அப்பானையிலேயே ஸ்திரமா யிருந்துவிடுகின்றன. ஈக்கள் நிறையச் சேர்ந்தபிறகு அப்பானையை ஒரு கம்பளியினால் மூடி எங்கேயாகிலும்பத்திரமாய்வைக்கிறார்கள். தேனைச் சேகரிக்க வேண்டும்பொழுது வைக்கோலைக் கொளுத்திப் பெரிய ஈக்களைத் துரத்திவிடுகிறார்கள். பிறகு குஞ்சுகளுடன் தேன்கூட்டை எடுத்துக்கொள்ளுகிறார்கள். புகைபோடுவதினா லநேக பெரிய ஈக்கள் இறந்துவிடும். சிறிய ஈக்களை யெடுத்து நீக்குவதினால் அவைகளின் விருத்திக்குத் தடையுண்டாகிறது.

இப்படிப் பழையமாதிரியான தொழில்களைச் செய்கிற விடங்களிலுள்ள ஜனங்களுக்குப் புதியதும் ஐரோப்பிய நாடுகளில் செய்துவருகிறதுமான பழக்கங்களைக் கற்றுக் கொடுப்பது மிகவு முபயோககரமானது. தென்னிந்தியாவில் சில விடங்களில் செய்த பிரயத்தனங்களில் ஐரோப்பாவைப்போல் அதிக பலனுண்டாகாவிட்டாலும் அவைகளால் சிறிதாயினும் பலனுண்டென்று தெரியவருகிறது.

இந்திய தேனீக்களில் முக்கியமாய் மூன்று ஜாதிக ளிருக்கின்றன. அவைகளி லொன்று வண்டைப்போல் பெரியவையாயிருக்கும். அவை சாதாரணமாய்ப் பாறைகளின் பொந்துகளில் கூடுகட்டும்.

இவைகளைக்காட்டிலும் கொஞ்சம் சிறியவையாயிருக்கிற மற்றொரு ஜாதி ஈக்கள் பட்டுப்போன மரங்களில் தேனைச் சேகரிக்கும். இவைகளின் தேன் முற்கூறியவற்றின் தேனைக்காட்டிலும் வெண்மையாயிருக்கும். மரக்கிளைகளில் கூடுகட்டுகிற மற்றொரு

வகை ஈக்கள் இவைகளிலெல்லாம் மிகவும் சிறியவை. இவை சேகரிக்கிற தேன்தான் அதிக தெளிவாயும் இங்கிலாந்து தேசத்துத் தேனைப்போல் மதுரமாயுமிருக்கும். ஆனால் இவை சேகரிக்கிற அளவு மிகச் சிறியது. சிலவேளைகளில் இத்தேசத்துத் தேன் கசப்பாயும் விஷத்தன்மையுள்ளதாயு மிருப்பதுண்டு. அதற்குக் காரணம் சில ஈக்கள் சில விஷச்செடிகளின் புஷ்பங்களிலிருந்தும் தேனைக் கொண்டுவருவதா யிருக்கலாம். ஆகையால் தேனீக்களை நூதனமாய் வளர்க்கிற விடங்களுக் கருகில் நல்ல புஷ்பத்தோட்டங்களை யேற்படுத்தி வைப்பதும் அனுகூலமாயிருக்கும்.

ஆற்றித்தேற்றும் ஓர் சிறிய ஜந்து.

அமெரிக்கா கண்டத்தில் ஐக்கிய மாகாணங்களில் பாஸ்டன் என்னும் நகரத்தில் சில வருஷங்களுக்குமுன் அபிகேல் என்றொரு ஸ்திரீ வசித்துக்கொண் டிருந்தாள். அவளுடைய தகப்பன் பணக்காரனாயிருந்ததினால் பாலியத்தில் அவள் அதிக சுகமனுபவித்தவள். பிறகு அவளுக்குக் கஷ்டதசை வந்ததினால் தாய்தந்தையரையும் பணத்தையுமிழந்து ஏழையாகிவிட்டாள். அதுமுதலவள் கூலிவேலை செய்து சம்பாதித்துக் காலங்கழித்து வருகையில் இத்தியாதி கஷ்டங்களினால் நோயாளியு மாகிவிடவே வேலை செய்யவு முடியாமற் போயிற்று. அப்பொழுது அவளுடைய பாலிய சிநேகிதர்களாயிருந்த இரண்டு பெண்கள் அவளை யாதரித்து வந்தார்கள். இப்படிச் சிலநாள் சென்று நோய் கொஞ்ச மனுகூலமானவுடன் தன்னுடைய நேசர்களுக் கதிக கஷ்டங் கொடுக்கக் கூடாதென்று தானே ஆகாரஞ் சம்பாதிக்கும்பொருட்டு மெதுவா யெழுந்து வெளியே போய் ஏதாவது சம்பாதித்து வருவாள்.

இவ்வாறு நடந்துவருகையி லோர்நாள், அவள் வீட்டுக்குத் திரும்பி வந்துகொண் டிருந்தபோது வீதியி லொரு பூனைக்குட்டி பசியினால் சோர்ந்து விழுந்திருந்ததைக் கண்டாள். அது தன்னைவிடப் பலவீனமுள்ள ஸ்திதியிலிருந்ததினா லதை மெதுவா யெடுத்துக்கொண்டு தன் வீட்டுக்குச் சென்றாள். அவள் வீட்டுக்குப் போனதும் தன்னுடைய அறையண்டை யொரு பாத்திரத்தில் பாலும் ஒரு ரொட்டியும் வைக்கப்பட்டிருந்ததைக் கண்டாள். "இவைகளை நம்முடைய நண்பர்களி லொருவர் கொண்டுவந்திருக்க வேண்டும், இதற்குச் சந்தேகமேயில்லை. இதுவும் நம்முடைய அதிர்ஷ்டந்தான். இது நம்மைவிடப் பரிதாபமான நிலைமையிலிருந்த வொரு பிராணியை, வீதியிலேயே இறக்கும்படி விட்டுவிடாமல் காப்பாற்ற வேண்டுமென்கிற வெண்ணம் நமக்குத் தோன்றியதின் பலன் போலும்" என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டு, அப்படிப்பட்ட நல்ல புத்தியைத் தனக்குக் கொடுத்ததற்காகக் கடவுளை வணங்கினாள். பிறகு உடனே அடுப்பைமூட்டி அந்தப் பாலைக் காய்ச்சி ரொட்டியைத் துண்டுகளாக்கி அதில் போட்டு பூனைக்குட்டியை ஒரு கையில் வைத்துக்கொண்டு மற்றொரு கையினால் அதை யூட்டினாள். அதன் வயிற்றுக்குள் சிறிது ஆகாரஞ் சென்றவுடன் அப்பூனைக்குட்டி கண்களைச் செவ்வையாய்த் திறந்துபார்த்து எழுந்து நிற்கவும் யத்தனித்தது. அதன் வயிறு நிறைகிறவரையில் அவள் தன்னுடைய பசியைக் கவனியாமல் அதை நன்று யூட்டினாள்.

அன்றிரவு அவளுக்குத் தனித்திருக்கிறதைப்பற்றிய விசாரமே தோன்ற வில்லை. ஏனென்றால் அந்த நன்றியுள்ள பூனைக்குட்டி அவளுடைய மடியில் வெகுநேர முட்கார்ந்து கொஞ்சிக்கொண்டிருந்தது. அதுமுதல் அபிகேலுக்கும் அக்குட்டியினிடத்தில் அதிகப் பிரீதியுண்டாகி, அதைத்தானே வளர்த்துவந்தாள். அவள் வேலைக்காக வெளியே சென்றபோதும் அப்பூனைக்குட்டி யெங்கும் ஓடிப் போகாமல் வீட்டிலேயே இருக்கும். அபிகேல் வேலையிலிருந்து திரும்பி வரும்பொழுது அதிக ஆவலுடன் குறுகுறுத்துக் கொண்டு அவளிடத்திற்குச் செல்லும். இப்படி இருவரும் சந்தோஷமா யொருவருஷ கால மிருந்தபிற்பாடு மறுபடியும் அபிகேலுக்குத் தேக அசௌக்கிய முண்டாயிற்று. வெகுநாள்வரையில் வேலைக்குப் போக முடியாமலிருந்ததினால் வீட்டுவாடகை பாக்கியில் நின்றுவிட்டது. ஒருநாள் வீட்டுக்காரி அவளை வாடகைக்காகத் தொந்தரவு செய்தாள். அப்பொழுதும் அவள் வாடகை கொடுக்காததினால், அவளை வீட்டிலிருந்து துரத்திவிட்டாள். வேறு எங்காகிலும் போகலாமென்று புறப்படும்பொழுது வீட்டுக்காரி

பூனையை ஓரறையி லடைத்துவிட்டு வாடகை கொடுக்கிறவரையி லதைத் தரமாட்டேனென்று சொல்லிவிட்டாள். அபிகேல் அதிக மனவருத்தத்துடன் கண்ணீர் சொரிந்துகொண்டே அவளுடைய சிநேகிகளி லொருவளுடைய வீட்டுக்குச் சென்று அவளிடத்தில் தன்னுடைய துக்ககரமான விருத்தாந்தத்தைச் சொல்லி யழுதாள். அவள் அபிகேலைத் தேற்றி யவளுக் குணவளித்துப் படுக்கையையுங் கொடுத்தாள். ஆனால் அபிகேலுக்குத் தூக்கமே வரவில்லை. அவ் வீட்டுக்காரி அந்தப் பூனைக்குத் தீனி கொடுக்கிறாளோ இல்லையோவென்கிற விசாரமே யவளுக் கதிகமாயிருந்தது. மறுநாட் காலையி லவ்வீட்டுக்காரி பூனையை வெளியே ஓட்டிவிட்டாளென்கிற சமாசாரத்தை யாராலோ அறிந்து அதிக விசனமடைந்தாள். ஆனால் அவ்வூரில் பேவாரிசாய்த் திரிகிற பிராணிகளை யாதரிக்கிறதற்காக வொரு ஆசிரயமுண்டு. அங்கேபோய்ப் பார்த்தா லொருவேளை தன்னுடைய பூனை யகப்படுமென்கிற நம்பிக்கையுட னவ்வாசிரயத்திற்குச் சென்றாள். அங்கே போய் விசாரித்ததில் அவள் சொன்ன அடையாளங்களுள்ள பூனை யொன்றேனு மில்லையென்று சொல்லிவிட்டார்கள். அதன்மேல் அபிகேல் அதிக துக்காக்கிராந்தியாய்த் திரும்பிவருகையில் கதவண்டை யவ்வாசிரயத்தி னதிபதி வரக்கண்டாள். அவர் இவளுடைய முகத்தைப் பார்த்து: "அம்மா! நீர் அதிக சிந்தையுள்ளவராகக் காணப்படுகிறீர். உமக்கென்ன கஷ்டம்" என்று விசாரித்தார். அவர் அவ்வளவு மனவிரக்கத்துடன் விசாரித்ததினா லபிகேல் தன்னுடைய சரித்திர முழுவதையும் அவரிடத்தில் சொன்னாள். அவ ரதன்மேல் அபிகேல் குடியிருந்த வீட்டின் விலாசத்தைக் குறித்துக்கொண்டு அவளை மறுபடியு மடுத்தநாளங்கே வரும்படி சொல்லி யனுப்பிவிட்டார். மறுநாள் அபிகேல் அங்கே போனதும் ஒரு கூடையில் தன்னுடைய அழகான பூனை யிருக்கக் கண்டாள். அவளுடைய பிராணத் தோழனைக் கண்டபோது அவளுக்கு எவ்வளவு சந்தோஷ முண்டாயிருக்கும்! அதன் பிறகு அவளும் நாளாவர்த்தியில் சௌக்கிய மடைந்து மறுபடியும் வேலைக்குச் சென்று முன்னைக்காட்டிலு மதிகமாய்ச் சம்பாதிக்க வாரம்பித்தாள். அப்பூனையும் முன்னிலும் நேர்த்தியான வீட்டில் வசித்துக்கொண்டு அதிக சுகத்தை யனுபவித்துக்கொண்டிருந்தது.

குதிரையின் பாதம்.

குதிரையின் பாதமானது வட்டவடிவமான ஒரே குளம்புக்கட்டி யென்பதாகவும் அது தேய்வுறும லிருக்கும்பொருட்டு அதற்கு லாடம் தைப்பதாகவும் அநேகர் நினைக்கிறார்கள். அது அதன் தொழிலைச் செய்வதற்காகத் தகுந்தவண்ணம் வெகு விநோதமாயும் பூரணமாயு மமைக்கப்பட்டுள்ள கருவியா யிருக்கிறதென்றும் நாம் அதற்குச் சேர்க்கிற உபகருவி சில சமயங்களி லதைக் காப்பாற்றுவதை விட்டு ஹானியை விளைக்கிறதென்றும் அவர்களுக் கெடுத்துச்சொன்னா லவர்கள் வியப்படைவார்கள்.

குதிரையின் பாத முழுவதும் குளம்பல்ல, உண்மையான பாதத்தை யுறைபோல் மூடிக்கொண்டிருப்பது குளம்பு. அக்குளம்பு முன்பக்கத்தில் சுமார் அரையங்குல கனமுள்ளதாய்ப் பின்னுக்குப் போகப்போக மெல்லியதாயிருக்கும். அது குதிக்கால் புறமாக வட்டமா யகன்று மறுபடியு முள்ளுக்கு வளைகிறது.

உள்ளுக்கு வளைகிற முனைகள் இயற்கை ஸ்திதியிலிருக்கிற குதிரைக்கால்களில் நன்றாய்ப் புலப்படும். பலதடவை லாடந் தைத்த கால்களி லவை முழுதும் மறைந்துவிடுகின்றன. லாடங் கட்டுகிறவர்க ளவைகளை முழுதும் வெட்டிவிடுகிறார்கள். குளம்பின் பிரயோஜனத்தைச் செவ்வையாய்த் தெரிந்தவர்கள் அது கெட்ட வழக்கமென்று சொல்வார்கள். குளம்பின் உட்புறத்திலிருக்கிற ஒருவித நெகிழ்ச்சியான பதார்த்தத்திற்கு ஜவ்வு என்று பெயர். இந்த ஜவ்வு தரையில் மோதப்படுகிற குளம்பி னதிர்ச்சி யுடனே பாதத்துக்குப் படாம லதைக் காக்கின்றது. இவ்வளவு பிரயோஜனமுள்ள வுறுப்பை அநேக மடமைவாய்ந்த லாடக்காரர் சீவித் தள்ளுகிறார்கள்.

குதிரையின் காலெலும்பு குளம்பின் முன் பக்கத்திலும் வலப்பக்க மிடப்பக்கங்களிலும் அதன் உட்புறமாகவே பல நரம்புகளுடன் வியாபித்திருக்கும். இந்த எலும்பு

பின் ஓரங்களில் சிறு சிறு முகடுகள் பொருந்தியிருக்கும். இவைகளில் குளம்பிலும் அதே மாதிரி யுண்டாயிருக்கிற முகடுகள் அணைக்கப்பட் டிருக்கின்றன. அவைகளின் முக்கியமான பிரயோஜனம் குளம்பைக் காலெலும்புடன் நன்றா யொட்டும்படி செய்வதுதான். அதுவேயன்றி, குளம்பி னதிர்ச்சியையும் அவை சிறிது குறைக்கும்.

குதிரையின் பாதம் தட்டையாயும் கடினமாயு மிருந்தால் அவை நழுகுவதற் கிடமிருக்கும். அதைத் தவிர்க்கும்பொருட்டுத்தான் அவை தரையில் நன்றா யூன்றும்படியாக அதன் ஓரம் அமைக்கப்பட்டிருக்கிறது. மேலும் குளம்புகள் நெகிழுந்தன்மையனவா யிருப்பதால், பாதம் தரையில் பட்டவுடன் குளம்புகளி னுட்ஜவ்வு அவைகளை மெதுவா யழுத்தி நன்றா யூன்றும்படி செய்கிறது. இந்த ஜவ்வினா லிருவிதப் பிரயோஜனமுண்டு. ஒன்று பாதத்தைத் தரையிலூன்றச்செய்வது. மற்றொன்று அதிர்ச்சியைக் குறைப்பது.

குதிரைகளின் சுபாவமான ஸ்திதியிலவைகளின் குளம்புகள் அதிக பலமுள்ளவையாயிருக்கும். அப்பொழுது அவைகளுக்கு வேறே யாதாரமொன்றும் வேண்டியதில்லை. நாகரீக தேசங்களில் போடப்பட்ட கடினமானரஸ்தாக்களிலவையோடும்போது அதிகமாய்த் தேயாம லிருக்கும்பொருட்டு, குளம்புகளுட னேதாவதொன்றை யணைத்து வைக்க வேண்டுமென்று கண்டுபிடிக்கப்பட்டது. அதற்காகக் குளம்பின் வெளியோரத்தில் ஒரு வளைவான இருப்புத்துண்டைத் தைப்பதுதான் சிரேஷ்டமானதென்று நிச்சயிக்கப்பட்டு அவ்வாறு செய்துவருகிறார்கள். இதைத்தான் லாடந் தைக்கிறதென்று சொல்வது. லாடமடிப்பதில் வெகு ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். சாதாரணமாய் லாடம் சிறியதாயிருப்பதே நலம். இவ்வளவு முக்கியமான வுறுப்பை நல்ல அனுபவமில்லாத லாடக்காரர்களி னிடத்தி லொப்புவிக்கக்கூடாது. லாடம் கொஞ்சம் பெரிதாகவாவது சிறிதாகவாவது இருக்கும்பக்ஷத்தில் அதைக் காய்ச்சிக் குளம்புக்குத் தகுந்தபடி வளைத்துக்கொள்ள வேண்டுமேயொழிய, குளம்பை யதிகமாய்ச் சீவக்கூடாது. சீவும்பொழுது உள் ஜவ்வை வெட்டாமல் ஜாக்கிரதையாய்ச் சீவவேண்டும்.

சிலர் அதிகநாள்வரையில் பழைய லாடத்தை நீக்காம லிருந்துவிடுகிறார்கள். மூன்று வாரம் அல்லது ஒருமாதத்துக் கொருதரம் புது லாடங்களை யடிப்பது மிகவும் நல்லது. குதிரையின் பாதத்தின் பல நுட்பமான வுறுப்புகளைக் கவனிக்கும்போது குதிரைகளினிடத்தில் நாம் தயையோ டிருக்கவேண்டுமென் றெல்லாருக்கும் தோன்றும். அவைகள் தம்மைத்தாமே காப்பாற்றிக்கொள்ளும்படி கடவுளால் அமைக்கப்பட்டிருக்க, அவைகளை நம்முடைய காரியங்களுக்காக உபயோகப்படுத்தும்பொழுது நாமும் அவைகளை வெகு ஜாக்கிரதையுடன் காப்பாற்ற வேண்டிய தவசியமல்லவா?

மஹாராஜா அவர்களின் நேபாள ஜந்துக்கள்.

நம்முடைய சக்கிரவர்த்தியாருக்கு நேபாள கவர்ன்மெண்டார் பரிசாகவளித்த இந்தியாதேசத்து மிருகங்கள் லண்டனுக்குக் கடந்த மேமாதத்தி னிறுதியில் போய்ச் சேர்ந்தன.

கப்பலில் அவைகளை ஜாக்கிரதையுடன் பார்த்துக்கொள்வதற்காக கல்கத்தா மிருகக் காட்சிச்சாலை சூபரின்டென்டென்ட் வேலை பார்க்கிற மிஸ்டர் பாசு வென்பவரை யனுப்பினார்கள். யாத்திரையில் ஒரு மான் ஒரு மயில் இன்னு மிரண்டு மூன்று சிறிய பிராணிக ளிறந்துவிட்டன. அதைத்தவிர பெரிய மிருகங்களி லொன்றுக்கும் யாதொரு அபாயமும் வரவில்லை. அவைகளை இறக்குவதைப் பார்க்கக் கணக்கற்ற கூட்டம் வந்திருந்தது. அநேக பத்திராதிபர்கள் போடகிராப் யந்திரங்களுடன் வந்திருந்தார்கள். அவைகளை யிறக்கி "ரீஜென்ட்ஸ் பார்க்" ("Regent's Park") என்னும் தோட்டத்திற்குக் கொண்டுபோய் அங்கே கட்டப்பட்டிருந்த விடுதிகளில் அடைக்கப்பட்டன.

அவைகளிற் பெரிய மிருகங்களான காண்டாமிருகமும் நீர்எருமைகளும் மிகவும் நேர்த்தியானவையா யிருந்தன. அவ்வெருமைகளின் கொம்புகள் சுருங்கி யழகாயிருந்தன. அவை சிட்டகாங் ஜில்லாவிலிருந்து கொண்டுவரப்பட்டன. இவைகளைத்தவிர

பதினெரு மான்களும் ஆட்டுத்தினுசுகளில் சண்டைக்கடா வொன்றும் ஒற்றைக்கொம் பாடுக ளிரண்டு மனுப்பப்பட் டிருந்தன. அடர்ந்த ரோமமுள்ள நான்கு ஹிமாலயக் கரடிகளு மனுப்பப்பட்டன.

சிறிய பிராணிகளில் மலையாளதேசத்து அணில்கள், கீரிப்பிள்ளை, முள்ளம்பன்றி, புனுகுபூனை, உயர்ஜாதிப் புறக்கள், சில அருமையானகோழியினங்கள், பெரியபல்லி கள் முதலிய பலவிதமான ஜந்துக்களிருந் தன. அவைகளின் மொத்தக்கிரயம் இவ் வளவென்று தெரிய வரவில்லையாயினும் ஆயி ரம் பவுனுக்குக் குறையாம லிருக்குமென்று மதிக்கப்படுகிறது.

இந்திய கால்நடைகள்.

கால்நடைகளைச் சாஸ்திரோக்தமாக ஜனங்கள் பூஜித்துவருகிறதும் அவைக ளின் நல்ல ஸ்திதி வேளாண்மைக் கத்யா வசியமாயிருக்கிறதுமான தேசத்தில் ஜந்து வைத்திய சாஸ்திரத்தைக்கற்பதற்குப்போது மான மாணுக்கர் முன் வருகிறதில்லையென்று கொஞ்ச காலத்திற்குமுன் சென்னைக் கவர்ன் மெண்டார் அபிப்பிராயப்பட்டார்கள். இத் தேசத்தில் சாதாரணமாய்க் கால்நடைகளை வளர்க்கிற கிருஷிக்காரர்களே அவைகளைச் சிரத்தையுடன் கவனிப்பதில்லை. கால்நடை களை வளர்ப்பவர்கள் அவைகளின் தேக சௌக்கியத்தைப்பற்றிக் கவனிக்கவேண் டியதற்கு நம் முன்னோர்கள் ஏற்படுத்திய முறைகளையும் அனுசரிக்கிறதில்லை. ஐரோப் பியர்கள் போதிக்கிற விஷயங்களையும் செவ் வையாய்க் கற்று அதன்படி நடப்பதுமில்லை.

இவ்விரண்டு மார்க்கங்களிலும் நம்மவர் கள் ஒழுகாததினுல்தான் இத்தேசத்தில் கால்நடைகளி னபிவிருத்தியைப்பற்றி யதி கக் கவலைப்பட வேண்டியதா யிருக்கிறது. சென்னை இராஜதானியில் ஆடுமாடுகளுக் கிரையாகும்படியானபயிரொன்றும்விளைவிக் கிறதில்லை. அப்படியிருக்க, மேய்ச்சலுக்காக விடப்படுகிற நிலத்தையும் சாகுபடி செய் கிறது நஷ்டமான காரியமென்பது அநேக ருக்குத் தெரிகிறதில்லை. அசுத்தமான குளங் களிலும் குட்டைகளிலும் ஆடுமாடுகளைத் தண்ணீர் குடிக்கச்செய்வது தொத்துவியா திகளின் முக்கியமான காரணங்களிலொன்று என்பதையு மறிகிறதில்லை. இதைத் தவிர்ப் பது அசாத்தியமான காரியமா யில்லாதிருந் தும் அநேகர் அவ்வாறே செய்துவருகிறுர் கள். கோமாரி முதலிய நோய்கள் கண்டி ருக்கிற காலங்களிலுங்கூட கால்நடைகளுக் குச் சுத்தமான ஜலத்தைக் கொடுக்க முயல் வதில்லை. கெட்ட ஆகாரமும் கெட்ட பான மும் நோய்க்கு மூலகாரணமென்பது எல்லா ருக்கும் தெரியாதவிஷயமா? செல்வமுள்ள வேளாளர்கூட அவர்களுடைய கால்நடை களைக் கண்டவிடங்களில் திரியச்செய்து, கண்ட கண்ட புற்பூண்டுகளைத் தின்னவிடு கிறுர்கள்.

நேர்த்தியான கால்நடைகள் அதிகரிக்க வேண்டுமானல் பிரயோஜனமற்ற பசுக்களை யும் எருதுகளையும் நீக்கி, நல்ல ஜாதிமாடு களை வளர்த்துவரவேண்டும். ஜீவனத்திற்கு வேளாண்மையையே யெதிர்பார்க்க வேண் டிய ஜனங்களின் தொகுதி யதிகமாயிருக்கிற தேசத்தில் கால்நடைகள் விசேஷமாய் விற் பனையாகு மென்பதற் கென்ன சந்தேகம்? கால்நடைகளின் சாணம் அடுப்பெரிவதற்கு வேண்டிய வறட்டிகளாகவும் உழவுக்குவேண் டிய எருவாயும் உபயோகிக்கப்படுகிறது. இன்னம் கிணறுகளினின்றுந் தண்ணீரிறைத் தல், உழுதல் முதலிய கிருஷிவேலைகளெல் லாம் எருதுகளைக்கொண்டுதான் நடக்கவேண் டும். அறுப்பறுத்தபிறகு கதிரடித்துத் தானி யங்களைச் சந்தைக்குக் கொண்டுபோய்ச் சேர்க்கிற வேலையும் எருதுகளினுடையது தான். பலவாறு சொல்லி யென்ன? கால் நடைகளில்லாமல் உழவ வொருவேலையுஞ் செய்ய முடியாது. ரயத்துகளின் செல்வம் அவர்கள் வைத்திருக்கிற ஆடுமாடுகளின் தொகுதியைக்கொண்டும் கலப்பைகளின் தொகுதியைக்கொண்டும் மதிக்கப்படுகிறது.

விவாககாலங்களில் கலியாணப்பிள்ளைக்கு ஒரு பசுவையும் கொஞ்சம் பூமியையும் சீரா கக் கொடுக்கிற வழக்கமுண்டு. ஆகவே, இத் தேசத்தில் அதிகப் பிரயோஜனமாயிருக்கிற கால்நடைகளி னபிவிருத்தியைப்பற்றி எல் லாரும் அதிக வூக்கமுள்ளவர்களா யிருக்க வேண்டும்.

வர்த்தமானக் குறிப்புகள்.

1. **சென்னைப்பஞ்சரப்போல்.**—கீழ்க் கூறப் படும் கனவான்கள் இவ்வருஷத்துக்குப் பஞ் சரப்போல் கமிட்டி மெம்பர்களாக நியமிக்கப் பட்டிருக்கிறார்கள்:—ஆனரபில் மிஸ்டர் எல். எம். வின்ச் துரையவர்கள் (அக்கிராசனா திபதி), ராவ் பஹதூர் பன்சிலால் அபர்ணு சந்த், திவான் பஹதூர் கோவிந்தாஸ் சதுர் புஜதாஸ், லாட் கோவிந்தாஸ் கிருஷ்ண தாஸ், சா அகர்சந்த மான்மல், மோஹன் லால் கன்யாலால், மங்குமல் ஜேசிங், தரம்சே கான்ஜி அஷர், கோவிந்தாஸ் புரு ஷோத்தமதாஸ், டி. கன்ஷாம்சிங், ஜி. மோதி ராம், டி. சீதாராமசெட்டி, வி. ராமானுஜஞ் செட்டி (ஆனரெரி ட்ரெஷரர்), ஹரிதாஸ் விசன்ஜி (ஆனரெரி செக்ரிடெரி).

இவ்வாசிரயத்திற்குக் குதிரைகளை யனுப்ப வேணுமானால் குதிரை யொன்றுக்கு ஆறு மாசத் தீனிக்குச் செலவாகக்கூடிய தொகை யைச் செலுத்தவேண்டும்.

கல்கத்தாவிலிருந்து வந்திருந்த மிஸ் கோ ஹர்ஜான் நூறு ரூபாயும், தீனபோஷண சபையார் நூறு ரூபாயும் நன்கொடை யளித் தார்கள்.

2. **பெங்களூர் ஜீ. ஹி. நி. சங்கம்.**—இச் சங்கத்தின் காரியங்களைச் சரிவர நடத்தி வருவதற்குப் பொதுஜனங்கள் போதுமான வளவு உற்சாகத்துடன் உதவிபுரிகிறதில்லை. ஆகையால் அச்சங்கத்தை முனிசிபாலிடி யாரிடம் ஒப்புவிக்கும்பொருட்டு சங்கத்தி னங்கத்தினரெல்லாம் சென்ற ஜூன்மாதத்தி லொரு சபை கூடி நிச்சயித்து அவ்வாறே முனிசிபாலிடியாரிடம் ஒப்புவித்துவிட்டார் கள்.

3. **கோமாரி நோய்.**—ஆடுமாடுகளுக்கு வாயிலும் கால்களிலும் காண்கிற நோய்க ளின் காரணங்களைப்பற்றி விசாரணை செய் யும்பொருட்டு போர்ட் ஆப் அக்ரிகல்சர் (Board of Agriculture) சபையார் ஒ ராராய்ச்சிச் சங்கத்தை யேற்படுத்தி அச்சங் கத்தினர் இந்தியாவுக்கு வந்திருக்கிறார்கள். அவர்கள் இந்திய கால்நடைகளின் வியாதி களைப்பற்றி ஆராய்ச்சி செய்வதற்குமட் டும் ஆறுமாதகாலம் செல்லுமென்கிறார்கள்.

4. **திருப்பூர் கால்நடைகளின் காட்சி.**— கோயமுத்தூர் கிருஷிச் சங்கத்தார் கடந்த மேமாதம் 31-ம் தேதி முதல் மூன்றுநாள் மட்டக்குதிரைகள் கால்நடைகள் முதலிய வைகளின் காட்சியைத் திருப்பூரில் வெகு விமரிசையாய் நடத்தினார்கள்.

5. **குதிரைகளுக்குத் தேய்ப்பு மிகவும் அவ சியம்.**—வியர்வை யுலர்ந்துண்டாகிற அழுக் கைத் துடைத்தாலொழிய குதிரைகள் நல்ல ஸ்திதியி விருக்கமுடியா. சில குதிரைகள் சொறி பிடித்திருப்பதற்குக் காரணம் அவை களுக்குக் குறைச்சலான ஆகாரம் போடுவ தல்ல, குறைச்சலான தேய்ப்புத்தான் அதற் குக் காரணம். பென்ஸில்வேனியாவிலிருக் கிற ஒரு வைத்தியர் கொஞ்சம் எண்ணெ யில் தோய்த்த ஒரு கம்பளித்துணியை எப்பொழுதும் தயாராய் வைத்திருக்கிறார். அவர் குதிரையைச் சவாரிக்குக் கொண்டு போகுமுன்னம், அந்தத் துணியில் கார்பா லிக் ஆஸிட் என்னுந் திராவகத்திற் சில துளிகள் விட்டு, அந்தத் துணியினால் குதிரை யை யொருதரம் துடைத்துவிடுகிறார். அவ் வாறு செய்வதினால் குதிரையின் தேகத்தில் ஈக்கள் மொய்க்காம லிருக்கின்றன.

6. **அருமையான ஓர் நாய்.**—நியூ ஜெர்ஸி யென்னுந் தீவி லொரு துரைமக னிடத்தில் அதிக புத்திசாலியான நாயொன்றிருக்கிறது. அது தொப்பி, குல்லா முதலியவைகளை யெடுத்துக் கொண்டுவந்து கொடுக்கும். முதலில் தொப்பியைக் கொண்டுவா என்று சொல்லிவிட்டு, உடனே தொப்பி வேண்டாம், குல்லாவைக் கொண்டுவா என்று சொன் னால், அதை யுடனே அறிந்துகொள்ளும். நாள்தோறும் ரொட்டிக்கடைக்குத் தனியா கச்சென்று ஒரு கூடையில் வீட்டுக்கு வேண் டிய ரொட்டியைக் கொண்டுவரும். பிரதிதின மும் நான்குமுறை தபாலாபீசுக்குப் போய்க் கடிதங்களை வாங்கிக்கொண்டு வரும். அதை வாங்கும்பொருட்டு அதன் எஜமானனை யதன் விலை யென்னவென்று ஒருவர் கேட்ட தற்கு, அவர் "என்னுடைய நாயை வாங்கு வதற்கு வேண்டிய திரவிய மிவ்வுலகத்தில் யாரிடத்திலு மில்லை" என்று சொன்னாராம்.

Printed at the S. P. C. K. Press, Vepery, Madras—1912.

JL
Km 211.1909


THE ANIMALS' HOSPITAL.
வாயில்லா ஜீவன்களுக்கு வைத்தியசாலை.
C.S. Flint